DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 192/2024 |
| Deposition of Witness for | : | P.W. 9 |
| Name | : | **ராப்பர்ட் கென்னடி** |
| Father's Name | : | அருளப்பன் |
| Village | : | இரவியமங்கலம் |
| Taluk | : | தேவகோட்டை |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 53/2025 |

**(வழக்கின் 1வது எதிரி ஆஜர். 2, 3 ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 ம் எதிரிகள் சார்பில் Cr.P.C பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17.04.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது இரவியமங்கலத்தில் குடியிருந்து விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2, 8 மற்றும் வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையொப்பம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2ம் கையொப்பம் என்னுடையதுதல்ல. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது கடந்த 14.08.2021ம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் திருவேகம்பத்தூர் காவல்நிலைய வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை காவல்நிலையத்திற்கு வரும்படி அழைத்தார் என்றும் நானும் அ.சா.8 வேலு என்பவரும் காவல்நிலையத்திற்கு சென்றோம் என்று,ம் அங்கு போலிசார் வழக்கின் எதிரி அர்ஜீனனை விசாரித்தபோது அவர் தனிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றும் பின்பு ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மற்றும் போலிசார் முன்னிலையில் நாங்களும் உருவாட்டி பாலத்தின் கீழ் செல்லும் முட்புதர் மறைவில் எதிரி அர்ஜீனன் அடையாளம் காட்டி எடுத்துக்கொடுத்த சுமார் 46 செ.மீ நீளமுள்ள அருவாள் ஒன்றை போலிசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்காக நான் ஒப்புதல் வாக்குமூலத்திலும் மகஜரிலும் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனது கையொப்பம் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை**

**மறு விசாரணை:** இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.04.17 14:16:15 +0000

Chief Judicial Magistrate,

Sivagangai.